இருக்க வேண்டும், சமுதாயத்தினுடைய நிலைமைகளைப் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக இந்த நாட்டு நலப்பணித் திட்டத்தை நாம் ஆர்வத்தோடு செயல்படுத்தி வருகிறோம்.

காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் நூலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 801—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) காஞ்சிமாநகரில் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் பெரிய நூலகம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : :— (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பிறகுதான் தமிழகத்திலே மறுமலர்ச்சி ஏற்பட்டது. அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு நூலகத்தைக் காஞ்சிபுரத்திலே அமைக்கவேண்டுமென்று பலகாலமாக கூறிவருகிறார்கள். ஆகவே அரசு அதை மறுபரிசீலனை செய்து பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயராலே அங்கே ஒரு நூலகம் அமைக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, காஞ்சிமாநகரில் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் பெரிய நூலகம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா என்ற கேள்விக்கு வரவில்லை என்று சொல்லியிருந்தாலும் அரசு அது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரா விட்டாலும் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னதற்காக நன்றி தெரிவிப்பதோடு தொடர்ந்து ஒரு வினா எழுப்ப விரும்புகிறேன். அண்ணாவின் புகழ்பெற்ற

1981 எப்ரல் 20]

பல சொற்பொழிவுகள் டேப் செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன. அவைகளையெல்லாம் நூல் வடிவிலே கொண்டுவர அரசு முன்வருமா? அத்துடன் புகழ்மிக்க வரலாற்று ஓவியங்களான மக்கள் கரமும் மன்னன் சிரமும், இரத்தம் பொங்கிய 20 ஆண்டுகள், ராபர்ட் ஓவனைப் பற்றிய இருளில் ஒளி, ஏகாதிபத்தியம் இன்றும்-அன்றும், போன்ற எத்தனையோ கட்டுரைகள் நூல் வடிவாக வெளிவரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இவ்வாறு நூல் வடிவில் வெளியிடாமல் இருப்பது தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு குறை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அவைகளை நூல்களாக வெளியிட முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது தொடர்பாக தனிக்கேள்வி போட்டால் அதற்கும் பதில் சொல்லலாம்.

சோளிங்கர் நகர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்

*வினா எண் 802—திரு சி. கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் உள்ள வீடு கட்ட கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தில் 6 மாத காலமாக கடன் வழங்காமல் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) மீண்டும் கடன் வழங்கி ஏழைகள் வீடு கட்ட வசதி ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று தலைமைச் சங்கம் கடன் வழங்கி வருகிறது. 1980–81-ம் ஆண்டில் ஆயுள் காப்புறுதிக் கழகம் தலைமைச் சங்கத்தின் கடன் விண்ணப்பங்கள்பேரில் நிதி வழங்கத் தாமதமாகின்ற காரணத்தால், அரசு அளித்த முன் பணத்திலிருந்து (Ways and Means Advance) சோளிங்கர் நகர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு தலைமைச் சங்கம் 24–10–1980-ல் கடன் தொகை ரூ. 1,64,910 பட்டுவாடா செய்துள்ளது. மேலும் தாமதமின்றி சங்கத்தின் கடன் விண்ணப்பத்தின் மீது ஒப்பளிப்பு வழங்குமாறு ஆயுள் காப்புறுதிக் கழகத்தை அரசு நினைவூட்டியுள்ளது.